செ.வெ.எண்: 07. நாள் 04-09-2019.

## பத்திரிக்கை செய்தி

மாவட்ட சமூக நலத்துறையின் வாயிலாக விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளி ஆண்கள் பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்க தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**விண்ணப்பத்துடன் இணைப்பட வேண்டிய சான்றுகள்:**

1. வருமானச் சான்று ரூ.72,000/-க்குள் (வட்டாட்சியரிடமிருந்து பெற வேண்டும்)
2. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு கீழ் உள்ளவர், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர் என சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து உரிய சான்று பெறப்பட வேண்டும்.
3. இருப்பிடச் சான்று (வட்டாட்சியரிடம் பெற வேண்டும் அல்லது ரேசன் கார்டு)
4. தையல் பயிற்சி சான்று (பதிவு செய்யப்பட்ட தையல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது (6 மாத கால பயிற்சி)
5. வயது சான்று (20 முதல் 40 வயது வரை) அல்லது கல்விச் சான்று அல்லது பிறப்புச் சான்று
6. சாதிச் சான்று
7. கடவுச் சீட்டு (Passport Size Photo) அளவு மனுதாரரின் கலர் புகைப்படம்-2.
8. விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளி (பெண்) அதற்கான சான்று நகல்.
9. ஆதார் அடையாள அட்டை நகல்.

மேற்காணும் ஆவணங்களுடன் விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலகத்தில் 20.09.2019ம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முகவரி:**

மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடம்
பிங்கர்போஸ்ட்.
உதகமண்டலம்.

ஒப்பம்/-***
மாவட்ட ஆட்சித்தலைவர்
நீலகிரி மாவட்டம்.

/உண்மை நகல் உத்திரவுப்படி/

மாவட்ட சமூகநல அலுவலர்
நீலகிரி மாவட்டம்.